★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu". A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 21உ சனி (6—10—56) ★ ★ வெளியீடு : புரட்டாசி 22உ ஞாயிறு (7—10—56) [இதழ் 101

ஆணா, பெண்ணா?

பிறக்கு முன் கண்டுபிடிக்கலாம்

★

லண்டன், அக். 6—

குழந்தை பிறப்பதற்கு முன்னரே, அது ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்பதைக் கண்டுபிடிக்கும் முறையைப் பிரிட்டிஷ் டாக்டர்கள் கண்டுபிடித்துள்ளனராம். அவர்கள் நடத்திய 48 சோதனைகளில் முழு வெற்றி கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சவமொழிக்கு அடிக்குது யோகம்!

வளர்ச்சிக்கான முறை வகுக்க ஒரு ஆய்வுக் குழு

ஆறு திங்களில் இந்தக் குழு சிபாரிசு செய்யுமாம்

இந்தியப் பேரரசின் வடமொழிக் காதல்

சவமொழியாம் வட மொழியை உயிரூட்டி வளர்ந்தோங்கச் செய்வதில் இந்தியப் பேரரசு தீவிரம் காட்டத் தொடங்கி இருக்கிறது.

வடமொழிப் பயிற்சியை விரிவாக்கவும், ஆராய்ச்சித் துறையை வளமாக்கவும், எந்தெந்தப் புதுமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதைக் கண்டறிந்து, தகுந்த சிபாரிசுகளைச் செய்யவேண்டும் என்ற நோக்குடன், ஆய்வுக் குழு ஒன்றினை இந்தியப் பேரரசு நியமித்து இருக்கிறது.

அவ்வாய்வுக் குழு, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் சுற்றி, மாகாண ஆட்சியினுடையவும், வடமொழிக் காதலர்களுடையவும் எழுத்து மூல அல்லது வாசா மூல சாட்சியங்களைப் பெற்று, வடமொழி ஆக்கத்திற்கு வழிகோலுமாம்.

ஆய்வுக் குழு உறுப்பினர்களில் சிலரைக் கொண்டு துணைக் குழுக்களை நியமித்து, மொழி பற்றியக் குறிப்பிட்ட விவகாரங்களை விசாரித்தறிந்து முடிவு கட்டும் அதிகாரமும், அக்குழுவிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆறு மாதங்களுக்குள்ளாக இந்த ஆய்வுக் குழு சிபாரிசுகளை செய்து முடிக்கவேண்டும்.

வடமொழி ஆய்வுக் குழுவின் தலைவராக மேற்கு வங்காள மேல் சட்டசபை தலைவராக இருந்துவரும் டாக்டர் சுனுதி குமார் சாட்டர்ஜி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். வேறு ஏழு வடமொழி வல்லுனர்கள் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சென்னை பல்கலைக் கழக வடமொழிப் பேராசிரியராக இருந்துவரும் டாக்டர் ஏ. வி. இராகவன் அவர்களும் ஒருவராவார்.

சாமி படுகொலை வழக்கு

புலன் விசாரணை முடிந்தது

தூத்துக்குடி, அக். 5—

கே. வி. கே. சாமி அவர்களின் படுகொலை பற்றிய புலன் விசாரணை முற்றுப்பெற்றுவிட்டதாகத் தெரிகிறது.

இக்கொலை குறித்த பூர்வாங்கக் குற்றப் பத்திரிகை இன்னும் சில நாட்களில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனச் செய்தி தரப்பட்டு இருக்கிறது.

'விசைத் தறியால் கைத்தறித் தொழில் அழிந்துவிடும்'

'அதனால் இலட்சக்கணக்கானவர் வேலையிழக்க நேரிடும்'

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் மாநாடு எச்சரிக்கை

'கைத்தறித் தொழில் துறையில் விசைத் தறிகள் அமைப்பதற்கு சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் மாநாடு எதிர்ப்புத் தெரிவித்தது. இது சம்பந்தமான தனது முடிவை அரசாங்கம் அமுல் நடத்தக்கூடாது என்றும் அம்மாநாடு கேட்டுக்கொண்டது. விசைத் தறிகள் இறுதியில் கைத்தறித் தொழிலை அழித்துவிடும் என்றும், இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலையை இழந்துவிடுவார்கள் என்றும், நாட்டில் இதனால் அமைதியற்ற நிலை ஏற்படும் என்றும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டது.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தில் 1956-ம் ஆண்டு பருத்தித் துணிகள் (கைத்தறி உற்பத்தி) கட்டுப்பாடு உத்தரவு ரத்து செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தங்கள் தறிகளை பதிவு செய்யும்படி தறி நெசவாளர்கள் மனுச் செய்து கொள்ள வேண்டும் என்றும், லைசென்சுகள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இவ்வுத்தரவு கூறுகிறது. கைத்தறி நெசவாளர்கள் கல்வி கற்காதவர்களாக இருப்பதால் இவ்வுத்தரவு ரத்து செய்யப்படவேண்டும் என்று இத்தீர்மானம் கூறுகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நிதி உதவி அளிப்பதற்காக ஒரு தனி நிதி அமைப்பை நிறுவவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை, இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானம் கேட்டுக்கொள்கிறது.

அரசாங்க உதவியுடன் குறைந்த விலைக்கு நூல் விநியோகம் செய்ய ஏற்பாடுசெய்ய வேண்டும் என்றும் நல்ல தரமுள்ள சில ரகங்களைச் சேர்ந்த கைத்தறித் துணிகளுக்கு விலை ஆதரவு அளிக்கப்படவேண்டும் என்றும் மற்றொரு தீர்மானம் கூறுகிறது.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர்கள் காங்கிரசை அகில இந்தியக் கைத்தறி நெசவாளர் காங்கிரசுடன் இணைப்பதென்றும் இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடுகள்

தகவல் புத்தகம் தயாராகிறது

51 கோடி வாக்காளர் சீட்டு அச்சாகிறது

புதுடில்லி, அக். 5—

1957 பிப்ரவரி திங்களில் இந்தியா முழுவதும் பொதுத் தேர்தல் நடத்தத் தேர்தல் குழு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

அதிகப்படியான வோட்டுப் பெட்டிகள் தயாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாம். மக்கள் தொகை அதிகரிப்பினால், வாக்காளர் தொகை 5 சதவிகிதம் அதிகரிக்குமென்று தெரிகிறது. சென்ற தேர்தலில் வாக்காளர் தொகை $17\frac{1}{2}$ கோடி; இதில் பாதிப் பேர் பெண்கள்.

மாநில சட்டசபைக்கும் பாராளுமன்றத்திற்கும், 51 கோடி வாக்காளர் பதிவுச் சீட்டுகள் அச்சடிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாம். மாதிரிச் சீட்டு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாம்.

தேர்தல் குறித்த விவரங்கள் அடங்கிய 'தகவல் புத்தகம்' ஒன்றும் அச்சாகிறதாம்.

சென்ற பொதுத் தேர்தலுக்கு ரூ. $10\frac{1}{2}$ கோடி செலவாயிற்று என்றும், நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு எவ்வளவு செலவாகும் என்று கூற இயலாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலிடம் தலையிடாது!

சட்டசபைக் கட்சித் தலைவரை போட்டியின்றித் தேர்ந்தெடுக்கக் கோரிக்கை

புதுடில்லி, அக். 4—

புதிதாக அமைக்கப்படும் பஞ்சாப், பம்பாய், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மைசூர், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களைப் போட்டியின்றி எல்லோரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் தலைமை விரும்புவதாகவும், இத்தேர்தல் விஷயத்தில் காங்கிரஸ் மேலிடம் தலையிடாது என்றும் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

31,092 பேர் கைது

பம்பாய், அக். 6—

இங்கு நடந்த போராட்டத்தில் 31,092 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களில் 54 பேர் பெண்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களில் 19,445 பேர்மீது வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 18 419 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் பம்பாய் சட்டசபையில் முதலமைச்சர் தேசாய் அறிவித்தார்.

'அணு குண்டு' பட்டாசு

இந்திய சர்க்கார் தடைசெய்கிறது

புதுடில்லி, அக். 6—

அணுகுண்டு பட்டாசு வெடிப்பதால் பொதுமக்களுக்கு விபத்து ஏற்படும் என்று கருதி இந்திய அரசாங்கம் தடைசெய்கிறது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாடு

பிளாக்பூல், அக். 5—

இங்கு பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் ஆண்டு மாநாடு கூடியது. 1,300 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மாநாட்டின் கடைசி நாள் அன்று கிராஸ்மென் பேசுகையில், அடுத்த ஆண்டு ஒரு புதிய தொழிலாளர் நலக் கொள்கை வருமென்றார். 'பென்ஷன்' முறை தொழிலாளர்களுக்கும் அளிக்க அது ஓர் புரட்சிகரமான திட்டமாக இருக்கும் என்றும் அறிவித்தார்

ஜாக்கூப்பர் பேசுகையில் எல்லா தொழில்களையும் சர்க்கார் ஏற்று நடத்துவது கட்சியின் கொள்கையல்லவென்றும், இயந்திர மயமாக்குவதைக் கண்டு பயப்படவேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

நூல், ஜவுளி இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆலைகள் சங்கத் தலைவர் ராபர்ட்ஸ் பேசுகையில், இந்தியாவில் குறைந்த ஊதியத்திற்கு ஆட்கள் கிடைக்கிறார்கள் என்றும், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்கிறது என்றும், அதனால் பிரிட்டன், இந்தியாவுடன் போட்டிபோட முடியாது என்றும் குறிப்பிட்டார்.

பெரிய சூதாட்ட விடுதிகள் அம்பலம்

ரூ. 59,000, நான்கு இரும்புப் பெட்டிகள் பிடிப்பட்டனவாம்

விஜயவாடா, அக். 5—

விஜயவாடாவில் ஏழு பெரிய சூதாட்ட விடுதிகளில் போலீசார் சோதனைபோட்டு ரூ. 59,000 4 இரும்புப் பெட்டிகள், 6 இரும்பு அலமாரிகள், 6 சைக்கிள்கள் மற்றும் மேஜைகள், நாற்காலிகள், கைப்பற்றியுள்ளனர். ரூ. 2,000 பெறுமான தங்கமும் கைப்பற்றப்பட்டதாம்.

நியூயார்க் பருத்தி சூதாட்ட சம்பந்தமான புத்தகங்கள், கணக்குகளும் கைப்பற்றப்பட்டன.

இதில் குஜராத்தி சேட்டுகள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிடிபட்ட நோட்டுகளையும், நாணயத்தையும் எண்ணுவதற்கு 10 மணி நேரம் பிடித்ததாம்.

டவுன் டி. எஸ். பி., சர்க்கிள் இன்ஸ்பெக்டர், 7 சப்-இன்ஸ்பெக்டர்கள், 60 போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் இந்த சோதனையில் முனைந்தனர்.

டில்லியில் நில நடுக்கம்

புதுடில்லி, அக். 5—

இன்று காலை புதுடில்லியில் திடீரென நில நடுக்கம் ஏற்பட்டது. அதிர்ச்சியை வீட்டில் இருந்தவர்கள் உணர்ந்தனர். பங்களில் சென்றவர்கள் உணரவில்லை.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—10—'56 சனி

முப்பதாண்டு குத்தகை

[I]

இன்றையச் சூழ்நிலையில் காங்கிரசுக் கட்சிக்கு எதிராக, அனைத்திந்திய ரீதியில் பெயரளவிற்காவது ஒரு அரசியல் கட்சியைக் கட்டுவது என்பது கற்பனைக்கும் எட்டாத ஒன்றுகும். இது வெளிப்படையாகக் காண்கிற உண்மையாகும்.

பெயரளவிற்காவது அனைத்திந்திய அமைப்பில் ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவது சாத்தியமாகக்கூடியதே என எவராவது நம்புவார்களானல், அவர்கள் நம்பிக்கை வெற்றிகரமாக நிறைவேறுவதற்குக் காங்கிரசுக் கட்சி இடமளிக்குமா என்பதும் சிந்திக்கத்தக்கதாகும். அக்கட்சியின் சென்ற கால நடைமுறையும், இப்பொழுது கைபாண்டுவரும் போக்கும், அத்தகு நம்பிக்கை கொள்வதற்கு இடந்தருவதாக இல்லை.

மக்களாட்சி முறை அதற்குரிய புற அமைப்புக்கூடுடன் மட்டுமே அல்லாது, அதற்கு இன்றியமையாத உணர்வுடன் செயல்பட்டு வரவேண்டுமானல், ஆளும் கட்சிக்கு எதிராக வாய்ப்பு நேர்ந்தால் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய தன்மை கொண்ட ஒரு பலம் பொருந்திய எதிர்க் கட்சி இருந்து தீரவேண்டியது கட்டாயத்திலும் கட்டாயமாகும்.

அத்தகைய உயர்நிலை இந்தியத் துணைக்கண்டத்தில் உருவாகின்றவரையில், ஆளும் கட்சி பேசும் மக்களாட்சிக் கோட்பாடு வெறும் கேலிக்கூத்தாகும். அந்த ஆட்சியும் முதல்தரமான எதேச்சாதிகார ஆட்சியாகத்தான் செயல்படமுடியும். அது பேசும் சனநாயகமும் சாரமற்ற—குப்பையில் வீசி எறியத்தக்க சக்கையேயாகும்.

ஆட்சியிலிருந்துத் தங்களை விரட்டிவிட்டு, எந்த நிலையிலும் ஆட்சியை மாற்றுக் கட்சியினரிடம் ஒப்படைத்துவிட பொதுமக்களுக்குச் சிறந்த வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணம் ஆளும் கட்சியினர் உள்ளங்களில் இடம் பெற்றுல்தான், பொதுமக்களின் நலன்களில் அக்கறையும் பொதுமக்களை மக்களாக மதித்துப்பேச வேண்டுமே என்ற நற்பழக்கமும், ஆளும் கட்சியினரிடம் இயல்பாக இடம் கொள்ளுவது சாத்தியமாகும். அதுவுமன்றி, அவ்வெண்ணத்தின் எதிரொலியாக, தலை தடுமாற்றங்கொள்ளுவதும், நாத்தழும்பேறப் பேசுவதும், மக்கள் எதிர்ப்பு கண்டு ஏசுவதும், கொடிய அடக்குமுறைகொண்டு மக்கள் விருப்பங்களை ஒடுக்கி அழிப்பதும் அதிகாரத்திலிருப்பவர்களைப் பற்றிக் கொள்ளாமலிருப்பது எதிர்பார்க்கக் கூடியதாகும்.

மக்களாட்சி முறையில் ஆளும்கட்சிக்கு எதிராகப் பலம் பொருந்தியக் கட்சி இல்லாததால் ஏற்படும் தீமை, ஆளும் கட்சியினரை ஆணவக்காரர்களாக மாற்றிவிடும் அளவுடன் நின்றுவிடுவதில்லை. அந்தத் தீமை, அதற்கு மேலும் நீண்டு சென்று, சமுதாயத்தையும் நஞ்சாக்கிவிடுகிறது. அதன் விளைவாக, நாட்டில் சிறந்த அரசியல் பண்பு வளருவதும் அரும்பொருளாகிவிடுகிறது.

பாசிச அல்லது நாசிச ஆட்சித் தத்துவத்தின் பொருளியல்—சமூக இயல் - சமய இயல் - அரசியல் - உள்ளடக்கம் எதுவாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட காலத்தில் ஆட்சியைப் பற்றிக் கொண்டிருக்கிறவர்களிடை, தங்களைத் தவிர மக்களின் நலன்களைக் கட்டிக் காத்துப் பெருக்குகிறவர்கள் நாட்டில் வேறு எவரும் கிடையாது என்ற நினைப்பு உச்சம் பெற்றிருக்கும். அதுபோன்றே, நாட்டை ஆளுவதற்குரிய அறிவும் ஆற்றலும் உரிமையும் தங்களுக்கு மட்டுமே உண்டு, மற்ற எவருக்கும் கிடையாது என்ற அகந்தையும் ஆளவந்தார்களிடை மிகைபட வேரூன்றி இருக்கும். ஆளவந்தார்களிடை அமைந்துவிடும இத்தகு ஆணவ மனப்போக்குதான் பாசிச மனப்போக்கு, அல்லது நாசிச மனவளம் எனக் கூறப்படும். இந்த இழிந்த மனப் போக்குத்தான் அடால்ப் இட்லரிடமும், அவனுடைய நாசிக் கட்சியினிடமும் நூற்றுக்கு நூறும் உறைந்து கிடந்தது.

இதுவரை எடுத்துக்காட்டப்பட்டக் கருத்தைப் பின்னணியாகக் கொண்டுதான், இந்தியப் பிரதமர் பண்டித நேரு அகமதாபாத் நகரில், பெருத்த எதிர்ப்புக்கிடையே ஆற்றிய சொற்பொழிவில் காணப்பெறும் சிலவற்றையும், காங்கிரஸ் ஊழியர்களிடை புரிந்த போதனையில் இடம் பெற்று இருக்கும் சில கருத்துக்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்னும் இருபது அல்லது முப்பதாண்டுக் காலம்வரையில் காங்கிரசுக் கட்சிதான் இந்தியத் துணைக்கண்டத்தை ஆண்டு வரவேண்டும் என்ற தனது அரசியல் ஆசையை இந்தியப் பிரதமர் அறிவித்திருக்கிருர். அப்பொழுதுதான் சமதர்மம் சிறந்த கடைக்காலின்மீது கட்டப்பட்டதாகும் எனவும், அவர் விளக்கம் தந்திருக்கிருர்.

அவ்வாறு கூறுவதுடனும் அவர் நின்றுவிடவில்லை. காங்கிரசுக் கட்சியினிடம் மட்டும் ஆட்சிப் பொறுப்பு இல்லாது இருந்திருக்குமானல், தேசமே சிதறிவிட்டு இருக்கும் எனவும், அவர் தம்முடையவும் தம் கையடக்கமாக உள்ளக் காங்கிரசு கட்சியுடையவும் போராற்றல் குறித்துத் தற்பெருமையடித்துக்கொண்டிருக்கிருர்.

இந்தியப் பிரதமர் நேருவின் தற்பெருமைக் கூற்றிலிருந்து, பண்டிதரின் மனப்பாங்கு பாசிச மனப்பாங்கு என்ற மறுக்க முடியாத ஒரே ஒரு முடிவுக்குத்தான் அறிவுடைய எவரும் வந்தாக வேண்டும். இம்முடிவில் ஐயமிருக்கிறவர்கள், இட்லரும் முசோலினியும் உயிரோடு இருந்தக் காலத்தில் பேசிவந்தப் பேச்சுகளை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்து, உண்மை உணரவேண்டுகிறோம்.

'உள்ளத்தை வேதனையால் விம்மச் செய்துவிட்டனர்'

என். வி. நடராசன் இரங்கலுரை

"நமது கழகத்தின் கட்டுப்பாடு குறித்து அறிய முடியாதவர்கள், சில அநியாயக்காரர்கள் சேர்ந்து, கழகத்தின் காவலராக இந்த வட்டாரத்திலிருந்த தோழர் சாமி அவர்களைப் படுகொலை செய்திருக்கிருர்கள்.

"இந்தப் படுபாதகச் செயலைப் புரிந்த கயவர்கள் தோழர் சாமியை மட்டும் கொல்லவில்லை; எங்களை எல்லாம் கொன்றிருக்கிருர்கள்; கழகத்திலுள்ள இலட்சோபஇலட்சம் தோழர்களை எல்லாம் கொன்றிருக்கிருர்கள்; திராவிடம் முழுவதையுமே கொல்லாமல் கொன்றிருக்கிருர்கள். சாமியைக் கொலை செய்த கல்நெஞ்சம் படைத்த கயவர்கள், இந்த நகரத்து மக்களுடையவும் எங்களுடையவும் உள்ளத்தை வேதனையால் விம்மச் செய்திருக்கிருர்கள்.

"கடந்த பத்து நாட்களாக, சாமிக்கு நேர்ந்த முடிவு கேட்ட நாளிலிருந்து நாங்கள் படும் வேதனை—அண்ணு அவர்கள் அனுபவிக்கும் வேதனை, சொல்லுந்தரமன்று!

"இத்தனைக்கும் சாமியைப் பலிகொண்ட பாதகர்களுக்கு சாமி செய்த கொடுமைதான் என்ன?

"நாங்கள் இன்று உகுக்கும் கண்ணீர் வீணுகிவிடுமா? நாங்கள் படும் வேதனை, எங்கள் உள்ளத்தில் எழும் குமுறல் பாழாகிவிட முடியாது.

"வேதனையால் தவிக்கும் நாம், இந்த நேரத்தில் செய்யக்கூடியதெல்லாம் சாமி அவர்கள் எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டாரோ, அந்த இலட்சியத்திற்காகத் தொடர்ந்து பணியாற்றுவதுதான். சாமி அவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்வதே நமக்கு நாம் ஆறுதல் தேடிக்கொள்ள சிறந்த வழியாகும்.

"சண்டாளர்கள், தன் மகனைப் பலி கொண்டதால் ஏங்கித் தவிக்கிருர், சாமியின் தந்தை!

"நமக்கே நாம் ஆறுதல் கூறிக் கொள்ளவேண்டிய நிலையில், சாமியின் தந்தைக்கு நாம் எங்ஙனம் ஆறுதல் கூறுவோம்? அவருக்கு நாம் கூறக் கூடியதெல்லாம் ஒன்றுதான்—'சாமியின் இழப்பால் நீங்கள் படும் ஆருத் துயரை நாங்கள் உணருகிறோம்; உங்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பிலிருந்து நாங்கள் விலகிவிடமாட்டோம்,' என்பதைத்தான் நாம் கூறமுடியும்.

"எங்களை எல்லாம் இப்படித் தேம்பியழும்படி சாமியின் உயிரைப் பறித்த சண்டாளர்களைக் கூண்டிலேற்ற இந்தச் சர்க்கார் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம்."

என்று 30—9—56ல், தூத்துக்குடியில் நடைபெற்ற கே. வி. கே. சாமி அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

7 மாநிலங்களில்!

புதிய அமைச்சரவைகள் உருவாகும்?

புதுடில்லி, அக் 4—

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் 14 மாநிலங்களுள் 7 மாநிலங்களில் இத்திங்கள் மூன்ருவது வாரத்திற்குள் புதிய அமைச்சரவைகள் உருவாகுமெனத் தெரிய வருகிறது.

நாடெங்கும், சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்.

புதிய மாநில அமைப்பில் சேர்க்கப்படாத மாநிலங்களில் எந்த மாற்றமும் இருக்காது எனவும் தெரிகிறது.

புதிதாக அமைக்கப்படும் கேரளம் மட்டும் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்குமாம்.

50 தொகுதிகளில் மட்டும் ம. சோ. - க்கள் போட்டி?

மதுரை, அக். 4—

தமிழ் நாடு மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், வருகிற பொதுத் தேர்தலில், சட்டசபைக்கும், பாராளுமன்றத்திற்குமாகப் போட்டியிட 50 தொகுதிகளை மட்டும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்!

'எந்தத் தொழிலிலும் இழிவு இல்லை!'

'பிறரை சுரண்டி பிழைப்பதே இழிவு'

அமைச்சர் சேதுபதி விரிவுரை

நாகப்பட்டினம், அக். 4—

"பிறப்பினல் உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற மனப்பான்மை ஒழியவேண்டும்.

"சமுதாயத்திற்குச் சேவை செய்வதின் மூலமே மதிப்பை அடையமுடியும். தொழிலில் உயர்வு தாழ்வு கிடையாது. பிறரைச் சுரண்டிப் பிழைப்பதே இழிவானது"

—இவ்வாறு சென்னை அரசாங்க மராமத்து அமைச்சர் சேதுபதி நாகை வண்டித் தொழிலாளர் சங்க வெள்ளி விழாக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், பற்பல தொழில்களை இயந்திரமயமாக்குவதால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் என்பதை எச்சரித்தார். விவசாயத்தில் இயந்திரங்களைப் புகுத்துவதைக் கடுமையாகக் கண்டித்தார்

அவருடைய இலாக்காவில் கணக்குக் கூட்டும் வேலைக்கு மிஷின்களை உபயோகிக்க அரசாங்கம் முடிவு செய்ததைத் தாம் வேண்டாம் என்று கூறியதாகவும், அதனுல் ஊழியர்கள் வேலை இழக்கநேரும் என்று தாம் எடுத்துக்காட்டியதாகவும் அறிவித்தார்.

எல்லாத் துறையிலும் சேர்ந்தாற்போல் முன்னேற்றமடைந்தால்தான் எல்லா மக்களும் முன்னேற முடியும் என்றுகூறி, அபிவிருத்தித் திட்டங்களை நன்கு பரிசிலனை செய்து, பலருக்குக் கேடு நேராத வகையில் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஆண் - பெண் சேர்ந்து படிக்கக்கூடாதாம்!

கல்வி அமைச்சர் கருத்து

சேலம்—

உயர்நிலைப் பள்ளிகளில் ஆண் - பெண் இருவரும் சேர்ந்து படிப்பது கூடாதாம்! பெண்களுக்குத் தனிப் பள்ளிகளில் நமது கலாசாரத்திற்கு ஏற்றபடி கல்வி போதிக்கப்படவேண்டுமாம். இந்தக் கொள்கையைத்தான் அரசாங்கம் பின்பற்றுகிறதாம். இந்தத் தகவலை சென்னை அரசாங்கக் கல்வி அமைச்சர், சேலம் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இரயில் 'சிக்னல்' தொழிற்சாலை

புதுடில்லி, அக். 4—

இரயில்வே 'சிக்னல்' முதலிய கருவிகளைத் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை அகமதாபாத் அருகே அமைக்க ரூபாய் 25 இலட்சம் செலவிடப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

நன்மையில் தீமை!

கல்கத்தா, அக். 4—

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிக்க ஈடுபட்டுள்ள இந்திய இராணுவ விமானங்கள் அரிசி மூட்டையை வீசியதில், 4 பேர் காயமடைந்துள்ளதாகவும், ஒருவருக்கு மூட்டை விழுந்து கால் முறிந்ததாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்தியாவில் தற்போது மூன்று தொழில் நிறுவனங்கள் கடிகார உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன; இவை மூன்றும் சேர்ந்து வருடத்துக்கு மொத்தம் சுமார் 28,000 கடியாரங்கள் உற்பத்தி செய்ய வல்லனவாகும்.

குழப்பமா, விளக்கமா?

2-வது 5 ஆண்டுத் திட்டத்திற்கு பொதுவுடைமைக் கட்சி ஆதரவு!

இலட்சுமணபுரி, அக் 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொண்டு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பொது உடைமைக் கட்சி தன் முழு ஆதரவையளிக்குமாம். இருப்பினும், அத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள முறைகளை ஆதரிக்கவில்லை என்று இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் அஜாய்கோஷ் அறிவித்தார்.

ஆப்பிரிக்காவிலிருந்து வந்துள்ள 177 மாணவர்கள் இந்தியாவில் தற்போது கல்வி பயின்று வருகின்றனர்; இவர்களில் 19 பேர் இந்தி பயின்று வருகின்றனராம்.

இந்தியத் தொழில்களுக்கு உதவி

ஜப்பான் தயாராக இருக்கிறதாம்!

கல்கத்தா, அக். 4—

இந்தியாவில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளை நிரந்தரமாக ஜப்பானுக்கு அளிப்பதன் மூலம் ஜப்பானுக்குத் தேவையான இரும்புக்கு இந்தியா ஓர் நம்பிக்கையான நாடாக அமையுமாம். இதன் மூலம், இந்தியா—ஜப்பான் பொருளாதார உறவு பலப்பட ஏதுவாகும்.

இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் நிரந்தர ஒற்றுமையை உண்டாக்கும் நோக்கத்துடன் ஜப்பானிலிருந்து தாகாசுகி என்பார் தலைமையில் வந்துள்ள 22 பேரடங்கிய நல்லெண்ணத் தூதுக் குழு, மேற்கண்ட தகவல்களைத் தந்துள்ளது.

ஜப்பானுடன் ஒத்துழைப்புத் தருவதற்கு, இந்தியாவில் உள்ள சுரங்கத் தொழில் நல்ல ஊக்கத்தையளிக்கிறதென்றும், எதிர்காலத்தில் இந்தியாவில் மின்சாரக் கருவி உற்பத்திசாலைகள், எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள், சுரங்கத் தொழிற்சாலைகள் குடிசைத் தொழில்கள் ஆகியவைகளுக்கு ஜப்பான் ஒத்துழைப்புத் தரத் தயாராக உள்ளது என்றும் அத்தூதுக் குழு குறிப்பிட்டிருக்கிறது.

தற்போது இந்தியாவில் மொத்தம் 20 ஜப்பான் தொழிற்சாலைகள் இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான்பொதுதேர்தல்

லாகூர், அக். 3—

அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் தேர்தல் நடத்த இயலாது என்று பாகிஸ்தான் முதலமைச்சர் அறிவித்தார் தேர்தல் நடத்துவதற்கு 14 திங்கள் முன்னேற்பாடு செய்ய வேண்டியுள்ளதாம்.

கொள்கை வீரன் கே. வி. கே. சாமி மறைவுக்கு தமிழகமெங்கும் அஞ்சலி!

★

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவு குறித்து 30—9—56-ம் நாளன்று நாடெங்கிலுமுள்ள கிளைக் கழகங்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தொடர்புள்ள படிப்பகங்களும், மன்றங்களும் அனுதாபக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துமாறு கேட்டுக்கொண்ட பொதுச்செயலாளரின் அறிக்கைக்கிணங்க, அன்று தமிழகம், மற்றும் பம்பாய், மலேயா, இலங்கையிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள், மன்றங்கள், படிப்பகங்கள், தங்கள் தங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கும் வகையில், மௌன ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அவற்றுடன் மட்டுமின்றி, தோழர் சாமி அவர்கள் கழகத் திற்காற்றிய நற்பணி குறித்தும், அவருடைய கொள்கைப்பற்று, இலட்சியம் ஆகியவை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கம் தரும் வகையில் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியிருக்கின்றனர். அந்தக் கூட்டங்கள், ஊர்வலங்கள், நிகழ்ச்சிகளையெல்லாம் இடம் போதாமையின் காரணமாகச் சுருக்கி, நிகழ்ச்சிகளை மட்டும் வெளியிட்டிருக்கிறோம்.

சென்னை:

2-வது வட்டம் :

காலை 9 மணியளவில் தோழர் தி. ந. மதிவாணன் தலைமையில் வெங்கடாசலநாய்க்கன் தெரு, எண் 50 இல்லத்தில் நடைபெற்றது.

3-வது வட்டம் :

8-வது வட்டம் :

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத் தோழர்கள் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

காலை 8 மணிக்கு தோழர் வேலன் தலைமையில் கழக அறையில் நடைபெற்றது.

9-வது வட்டம் :

2-10-56 அன்று பரமானந்த முதலி தெரு, எண் 4. 'களஞ்சியம்' அலுவலகத்தில் நடைபெற்றது.

20-வது வட்டம் :

காலை 10 மணிக்கு, கழக இல்லத்தில் நடைபெற்றது. தி. மு. கழகம், மறைமலை அடிகள் நூல் நிலையம், கலைவளர்ச்சி மன்றம், திரு. வி. க. மன்றம், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் நினைவு மன்றம் ஆகியவை சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப் பட்டது.

14-வது வட்டம் :

காலை 9 மணியளவில் அண்ணா பிள்ளை தெருவில் தோழர் தி. ம. பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் உருவப் படம் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

18-வது வட்டம் :

தோழர் கா. கோ. நாராயணசாமி, தலைமையில் கிளைக் கழக இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

28-வது வட்டம்:

தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் கழக இல்லத்தில் நடைபெற்றது.

38-வது வட்டம்:

காலை 11 மணியளவில் கழகப் பணிமனையில் தோழர் நீலநாராயணன் தலைமையில் நடைபெற்றது

43-வது வட்டம் :

1—10—56 இரவு 9 மணியளவில் நடைபெற்றக் கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

44-வது வட்டம்:

தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் கழகப்பணிமனையில் நடைபெற்றது.

47-வது வட்டம் :

காலை 10 மணிக்கு கழகப்பணிமனையில் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது.

50-வது வட்டம்:

காலை 8 மணியளவில், தோழர் சுந்தரம் தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

வேளாளதேனாம்பேட்டை :

காலை 9 மணிக்கு, தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் யு ஈசுவரமூர்த்தி இல்லத்தில் நடைபெற்றது.

வடசென்னை ம. பொ. சி. மன்றம் :

1-10-56 மாலை, இராயபுரம் ஷேக்மேஸ்திரி தெரு, எண் 142, ம. பொ. சி. மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மவுண்ட்ரோடு :

அன்று காலை அப்பாவுகிராமணி தெரு மறுமலர்ச்சி நூல் நிலையத்தில் தோழர் மு மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது.

சிந்தாதிரிப்பேட்டை :

அன்று காலை சாமிநாய்க்கன் தெரு, எண் 37. கலைவளர் மன்றத்தில் தோழர் மயிலழகன் தலைமையில் நடைபெற்றது.

மீர்சாகிப்பேட்டை :

அழகிரி நாடக மன்றப் பணிமனையில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சேத்துப்பட்டு :

வ. உ. சி. இளைஞர் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ஆலந்தூர் :

காலை 10 மணிக்கு, கழக மாடியில் தோழர் எஸ். பாலன் தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் :

மாலை 6 மணிக்கு மௌன ஊர்வலமும், தோழர் வி. எல். வி இராசன் தலைமையில் வ. உ. சி. திடலில் அனுதாபப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் க. வேலாயுதனார், ஏ. சுப்பையா, என். முத்து, பால்ராசு, இலக்குமணன் ஆகியோர் பேசினர்

வல்லம்படுகை :

இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, தோழர் வீ. துரைசாமி அவர்கள் தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

வேதாரண்ணியம் :

தோழர் சிவ. கனகசுந்தரம் தலைமையில் கருப்புக் கொடிகளுடன் மௌன ஊர்வலம் நடைபெற்றது.

இராசிபுரம் :

மாலை 5 மணிக்கு, தோழர் கே. வி. கே. இராமசாமி தலைமையில் ஊர்வலமும், புதுசந்தைப்பேட்டையில் கூட்டமும் நடைபெற்றது.

மணப்பாறை :

மாலை 6 மணிக்கு, பழைய சந்தைத் திடலில் தோழர் மா. இளங்கீரன் தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பொ. மதிவாணன், ஏ. எஸ் கணபதி, என். வடிவேலன், நா. சக்கரபாணி ஆகியோர் பேசினர்.

நாகூர் :

காலை 9 மணிக்கு, பகுத்தறிவுப் படிப்பகத்தில் கூட்டம் நடைபெற்றது.

வளவனூர் :

கிளைக் கழகப் பணிமனையில் கூட்டம் நடைபெற்றது.

பாலக்காடு :

நகர தி. மு கழகச் சார்பில் தோழர் ஆர். கிருட்டிணன் தலைமையில் மௌன ஊர்வலமும், கோட்டை மைதானத்தில் தோழர் பொன்னுசாமி தலைமையில் அனுதாபப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் ஆர் கிருட்டிணன், கே. அச்சுதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வத்தலக்குண்டு :

மாலை 5 மணிக்கு, தோழர் செ கி. செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மௌன ஊர்வலமும், ரேடியோ மைதானத்தில் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

கோனேரிப்பட்டி :

இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில் கூட்டம் நடைபெற்றது.

இனாம் கரிசல்குளம் (திருவில்லிப்புத்தூர்) :

தோழர் கா. முத்துசாமி தலைமையில் மௌன ஊர்வலமும், பாண்டியன் திடலில் கூட்டமும் நடைபெற்றது. தோழர் ஐ நவமணி அனுதாப உரை நிகழ்த்தினார்.

மேலச்சேரி :

மௌன ஊர்வலமும், கூட்டமும் நடைபெற்றது.

எருமைப்பட்டி :

தோழர் ம. தர்மலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மங்கலம் :

இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, கழக இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது

கீவளூர் :

மாலை 4 மணிக்கு, தோழர் கலையழகன தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் சாமியின் பெயரால் படிப்பகம் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

நடராசபுரம் :

மாலை 6 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் கூட்டம் நடைபெற்றது.

சேவூர் (வ. ஆ.) :

இரவு $8\frac{1}{2}$ மணிக்கு, தோழர் வி. இ. செயராமன் தலைமையில் கழக இல்லத்தில் நடைபெற்றது.

உழவர்நகர் (சாலையூர்) :

காலை 9 மணிக்குக் கழக இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

எண்ணூர் :

இரவு 10 மணிக்கு, தோழர் இ. வி. சேது தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது. தோழர் கே. வி. கே சாமியின் நினைவாகத் தோழர் பி. வி. கணேசனுடைய ஆண் மகவுக்கு 'சாமி' என்று பெயரிடப்பட்டது.

பேரையூர் :

பகல் 11 மணியளவில் கழக இல்லத்தில், தோழர் கே. ஆர். கே. அய்யணன் தலைமையில் நடைபெற்றது

அம்மயநாயக்கனூர் :

மாலை 6 மணிக்கு, தோழர் அழகிரிசாமி தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

சென்னிமலை :

மாலை 6 மணிக்கு மௌன ஊர்வலமும், 7 மணி அளவில் கழகப் பணிமனையில் கூட்டமும் நடைபெற்றது.

நாமக்கல் :

அன்று கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் ந. பத்மராசு தலைமையில் நடைபெற்றது.

சலகண்டபுரம் :

மாலை $4\frac{1}{2}$ மணிக்கு வண்டி நிலையத்திலிருந்து தோழர் ரா. அ. அண்ணாமலை தலைமையில் ஊர்வலமும், திரு. வி. க. திடலில் தோழர் கு. தொ. வில்லவன்கோதை தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் இரா. கந்தசாமி, ச. அண்ணாமலை, கு. கே. ரங்கநாதன், ப. செலலப்பன், ச. கு. அப்பாவு, த. க. குருநாதன், ச. செ சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சத்துவாச்சாரி :

காலை $9\frac{1}{2}$ மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் வை சின்னையன் தலைமையில் நடைபெற்றது.

பூலாமேடு :

மாலை 6 மணிக்கு தோழர் சி. சுப்பிரமணியம் தலைமையில் ஊர்வலமும் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் ஆதிமூலம், சண்முகம் ஆகியோர் பேசினர்.

பாளையக்கோட்டை :

இரவு 8 மணிக்கு, கழக இல்லத்தில் தோழர் வி. என். மாணிக்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

நரசிங்கபுரம் :

தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்து கழக இல்லத்தில் கூடியிருந்தனர்.

விளாப்பாக்கம் :

மாலை 6 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் செ. பெ. சின்னப்பா தலைமையில் நடைபெற்றது.

செங்குன்றம் :

இரவு 8 மணி அளவில் தோழர் க. குருசாமி தையல் நிலையத்தில் தோழர் இரா. வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

கணியூர் :

இரவு 8 மணியளவில் தோழர் கே. கோபால்சாமி தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

இராசபாளையம் :

மாலை 6 மணிக்கு இல்லத்தார் தெரு, நகர் கழக அலுவலகத்தின் முன் தோழர் ச. முத்துசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திசையன்விளை :

மாலை 6 மணிக்கு தோழர் ஆ. கா. திருவாடிமுத்து தலைமையில் நடைபெற்றது.

சங்கரநயினார்கோயில் :

பிற்பகல் 2 மணிக்கு துணைச் செயலாளர் இல்லத்தில், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

அரூர் :

அன்று மாலை ஊர்வலமும், ரேடியோ மைதானத்தில் கூட்டமும் நடைபெற்றது.

திருச்சி :

காலை 11 மணிக்கு திருச்சி நகர மதுரை ரோடு தி. மு. கழக உட்கிளைக் கட்டிடத்தில் தோழர் ஏ ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

நெடுங்குளம் :

இரவு 8 மணியளவில் தோழர் நா. சிரங்கம் தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

நெடும்பலம் :

இரவு 9 மணிக்கு ஊராண்மைக் கழகப் பூங்காவில், தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இரகுநாதபுரம் (துறையூர்) :

அன்று காலை கிளைக் கழகப் பணிமனையில் தோழர் எம். ஆர். கோவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

புதுவை :

இரவு 7 மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஐம்பு, தெய்வசிகாமணி ஆகியோர் பேசினர்.

திருமங்கலம் :

கழகப் பணிமனையில் இரண்டு நிமிடம் மௌனம் மேற்கொள்ளப் பட்டது.

ஆலாந்துறை :

தி. மு. கழக வள்ளுவர் இல்லத்தில் தோழர் சுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கழிஞ்சூர் :

காலை 10 மணிக்கு, தோழர் க. சி. கிருட்டினன் தலைமையில், கழக இல்லத்தில் நடைபெற்றது.

குள்ளம்பட்டி :

பகல் 2 மணியளவில், அழகிரி பாசறையில் தோழர் பெ. அய்யண்ணன் தலைமையில் நடைபெற்றது.

ஏகாம்பரகுப்பம் :

இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, கிளைக் கழக அலுவலகத்தில் தோழர் கே. எஸ் மணி தலைமையில் நடைபெற்றது.

மோகனூர் :

மாலை 4 மணியளவில், தோழர்கள் எம். பி. வடிவேலு, பி. கெ. அரங்கசாமி, கே. எஸ். இராதாகிருட்டிணன், எம். ஆறுமுகம் ஆகியோர் அணிவகுத்துவர தோழர் கே. வி. கே. சாமியின் படம் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அழகிரி திடலில் தோழர் எம். பி. வடிவேலு தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். கருப்பண்ணன், கே. எஸ். இராதாகிருட்டிணன், இரா. கு. குருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வயிரிசெட்டிப்பாளையம் :

மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, தோழர் என். அரங்கசாமி தலைமையில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. கொப்பம்பட்டி, நாகைநல்லூர் கிளைக் கழகத் தோழர்களும் கலந்துகொண்டனர். தேர் நிறுத்த திடலில் தோழர் புரவி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

முருங்கப்பட்டி :

இரவு 9 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெற்றது.

தேனி :

தோழர் எஸ். எஸ். வாசு தலைமையில் கழகப் பணிமனையில் கூட்டம் நடைபெற்றது.

பரமக்குடி :

இரவு 9 மணிக்கு ரேவதி டாக்கீசில் தோழர் இ. நடராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பாலையம்பட்டி :

காலை 10 மணிக்கு, தோழர் எம். பொன்னிருளன் தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

திருவில்லிப்புத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

மாலை 5 மணிக்கு தோழர் சாமி அவர்களின் உருவப்படத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. நாயர் சதுக்கத்தில் கூட்டம் நடைபெற்றது.

மேற்கு வங்கத்தில் பெருவெள்ளம்

35 இலட்சம் மக்கள் அவதி

கல்கத்தா, அக். 6—

மேற்கு வங்கத்தில் உள்ள 14 மாவட்டங்களில் சமீபத்தில் ஏற்பட்ட, பெருமழையாலும், நதிகளின் வெள்ளத்தாலும் 35 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2,000 சதுர மைல் வெள்ளக்காடாக உள்ளது.

ஹூக்ளி நதியில் வெள்ளப் பெருக்கின் காரணமாகத் தண்ணீர் கரை புரண்டோடி சில தாழ்ந்த பகுதிகளை நாசப்படுத்தியுள்ளது.

இலங்கையிலிருந்து திரும்பிய மலையாளிகள்

உதவியளிக்க வற்புறுத்தல்

திருவனந்தபுரம், அக். 5—

இலங்கையிலிருந்து வெளியேறிய மலையாளிகள் மாநில அரசாங்கத்திற்குத் தாங்கள் சமர்ப்பித்த ஒரு மனுவில் தங்களை 'அகதிகள்' எனக் கூறியிருக்கிறார்கள்.

அத்துடன் இப்படி வெளியேறியவர்களைக் கவனித்து அவர்களுக்கு ஆவன செய்யவேண்டி மாநில அரசாங்கத்தில் புனரமைப்புத் துறை ஒன்றை நிறுவுமாறும் இம்மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இலங்கையிலிருந்து வெளியேறிய மலையாளிகள் சங்கத்தினல் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேலை அளிக்க சலுகைகள் காட்டவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவர்களுடைய புனரமைப்பிற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் இம்மனு கூறுகிறது.

45 ஆயிரம் மலையாளிகள் இலங்கையில் இருந்தனர் என்றும், ஏறத்தாழ எல்லோருமே இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர் என்றும் இச்சங்கத்தின் மூலமாகத் தெரியவருகின்றது. ஒரு புள்ளி விவர சர்வே நடத்துவதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளையும் தெளிவாக அறியலாம் எனவும் இச்சங்கம் ஒரு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

டில்லி அரசாங்கத்துக்குப் புதிய கட்டிடம்

ரூபாய் 42 இலட்சம் செலவில் கட்டப்படுகிறது

புதுடில்லி, அக். 6—

இந்திய அரசாங்க அலுவலகங்களுக்காக 6 மாடிகள் கொண்ட கட்டிடம் ஒன்று 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுகிறது எனத் தெரியவருகிறது.

மறைவு

நீண்ட நாள் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தவரும், தி. மு. கழக வளர்ச்சியில் முழு அளவு அக்கறை கொண்டவரும், சிறந்த பண்பும் எதிர்ப்புக்கஞ்சா உள்ளமும் ஆற்றலும் நிரம்பப் பெற்றவரும் கழக உறுப்பினர்களான தோழர்கள் சி. பீர், அமீது ஆகியோரின் தந்தையாரும், எஸ். இப்ராகிம் அவர்களின் மைத்துனருமான இராமநாதபுரம் திருப்புத்தூர் எஸ்.சின்னதுரை அம்பலம் அவர்கள் 5—10—56 பகல் 2 மணி அளவில் திருப்புத்தூர் தமது இல்லத்தில் காலமானார் எனும் செய்தி கேட்டு வருந்துகிறோம். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரியதாகுக!

(ஆ—ர்.)

குடியேற்றம் தொகுதியில் தி. மு. கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"9—10—56 மாலை 2-30 மணிக்கு, குடியேற்றம் இராசா தியேட்டரில், குடியேற்றம் தொகுதி தி. மு. க. தேர்தல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வங்கொண்ட பிரமுகர்களும் தவறாது வந்திருந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்."

—என்று, குடியேற்றம் நகர தி.மு. கழகச் செயலாளர் தோழர் கு. சி. பொன்னுசாமி அறிவிக்கிறார்.

குறிப்பு:—கூட்டத்திற்கு வரும் தோழர்கள் அழைப்பு அட்டைகளை உடன் எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை—சூளை

நகர இளைஞர் கழகம்:

7—10—56 காலை 8 மணிக்கு தோழர் மா. துரைக்கண்ணன் தலைமையில் கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்படும். மாலை 3 மணிக்கு இந்து யூனியன் கமிட்டி ஆரம்பப் பள்ளியில் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி நடைபெறும். திரு. டி. ஆர். பார்த்தசாரதி பரிசு வழங்குவார்.

* * *

8-10-56 மாலை 6-30 மணிக்கு, கல்யாண மேஸ்திரி தோட்டத்தில் தோழர் எ. பி. பாலசுப்பிரமணியம் தலைமையில் தோழர்கள் எம். வரதராசன், ஜி. கிருட்டிணன் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

7—10—56 காலை 10 மணிக்கு சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகச் சார்பில் தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் தோழர் ஜி. சிவப்பிரகாசம், 'செய்நன்றி அறிதல்' அதிகாரத்திற்கு விளக்கவுரையாற்றுவார்.

மதுரை மாவட்ட

தி. மு. க. கிளை உறுப்பினர்கட்கு:

"தேர்தல் சம்மந்தமாக இம் மாதம் 17, 18 ஆகிய தேதிகளில் பொதுச்செயலாளர் அவர்கள் தலைமையில் தேர்தல் ஆய்வுக் குழுவினர் மதுரை மாவட்டத்திற்கு வருகிறார்கள். அன்று தங்கள் தொகுதிகளில் உள்ள கிளைகளை நேரில் சொல்ல வேண்டுமே அல்லாது, அதற்கு முன் தனிக்கூட்டங்கள் கூட்டியோ தனிப்பட்ட முறையிலோ, யாருக்கும் வாக்குறுதி கொடுக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"12-10-56 காலை 9-மணிக்கு, காஞ்சிபுரம் இரயில்வேரோடு அருகாமையிலுள்ள நகராட்சித் தங்கும் விடுதியில், பொதுத்தேர்தல் ஆய்வுக்குழுவினர் வருகையையொட்டி, மாவட்டப் பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும், கழகப் பிரமுகர்களும் கலந்து ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

என்று, செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் டி. என் சம்பந்தம் அறிவிக்கிறார்.

முதலூர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

9—10—56 அன்று மாலை, மேற்படி மன்றச் சார்பில் தோழர் யோ. தாவீது தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கி மனோகரன் பேசுவார்.

கிராம முன்சீப் கொலை வழக்கு

தூத்துக்குடி, அக் 5—

கிராம முன்சீப் ஆறுமுகம் பிள்ளை என்பவரை, அவர் வீட்டிலேயே கொலை செய்யப்பட்ட தொடர்பில், மேற்படி ஊரைச் சேர்ந்த சேஷராஜா, ஆண்டிக்கோனார் என்ற இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனச் சொல்லப்படுகிறது. அவ்விருவரும் கொடுத்த வாக்குமூலத்தின்படி, ஆத்தூரிலிருந்தும் காயல்பட்டிணத்திலிருந்தும் நான்கு பெரிய அளவு அரிவாள்கள் போலீசாரால் கைப்பற்றப்பட்டிருக்கிறதாம். அவைகளில் இரத்தக்கறை இருக்கிறதாம்.

சேலம் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"கிருஷ்ணகிரி, தர்மபுரி வட்டங்களிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பிரமுகர்கள், தேர்தல் ஆய்வுக்குழுவினரை 13-10-56 மாலை 6-மணிக்கு கிருஷ்ணகிரியிலும்;

சேலம், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர், கரூர் வட்டங்களைச் சேர்ந்த கிளைகளின் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மற்றும் கிளைக் கழகப் பிரமுகர்கள் 14-10-56 காலை 9-மணிக்கு, சேலம் பிரபாத் சினிமாக் கொட்டகையிலும், சந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:—தேர்தல் ஆய்வுக்குழுவினரைச் சந்திக்க விரும்பும் தோழர்கள் அவரவர்கள் சார்ந்திருக்கும் கிளைக் கழகச் செயலாளரின் அத்தாட்சி பெற்று வரவும்.

—என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

வயிரிசெட்டிப்பாளையம்:
மாரியம்மன் கோயில் முன்பு
8-10-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: அ. இராசு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
சி. மாணிக்கம்
என். அரங்கசாமி
டி. கே. பி. சாமி
கை. ஆறுமுகம்

★

சேலம்:
கல்லாங்குத்து தெரு 13-வது வட்டக் கழக முன்னிலையில்
7-10-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: ஏ. மாரியப்பன் எம்.சி.
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

மாயூரம்:
டபீர் தெருவில்
7—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: கா. மீனாட்சிசுந்தரம்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்
து. காசிநாதன்

★

செங்கற்பட்டு:
தர்க்கா மைதானத்தில்
7—10—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

★

ஆலத்துடையான் பட்டி:
தி மு. கழகத் துவக்க விழா
கே. வி. கே. சாமி திடலில்
(சின்ன ஏரி மைதானம்)
8—10—56 மாலை 7 மணிக்கு
தலைவர்: அ. கலியபெருமாள்
பேசுவோர்:
சி பி. சிற்றரசு
எம். எஸ். மணி
மு. பெ. முத்துக்கருப்பன்

★

பொன்மலைப்பட்டி:
வ. உ. சி. திடலில்
10—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். எஸ். மணி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
ஏ. பி. தர்மலிங்கம்

சொற்பயிற்சிக் கூட்டம்

7—10—56 காலை 10-மணிக்கு, சென்னை-வண்ணை இளங்கோ கலை மன்றத்தில், தோழர் செங்கேணி தலைமையில் தோழர் கோ. கு. சேகர் மற்றும் பலர் பேசுவர்.

சென்னைக் கல்விச் சங்கம்

7—10—56 மாலை 5 மணிக்கு பட்டாளம் ஸ்டிரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் திரு. த. வே. முருகேசனர் தலைமையில், திரு. தொ. இரா. செயராமன் 'மக்கள் பண்பு' எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

7—10—56 காலை 9 மணிக்கு, சென்னை — திருவல்லிக்கேணி 42-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையில் (4, நமசிவாய முதலி தெரு) தோழர் கரிகாலன் தலைமையில் நடைபெறும். 'ஓட்டுரிமையும் மக்கள் கடமையும்' என்பது குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

தலைமை நிலையச் செய்தி:

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்:

அக்டோபர்			அக்டோபர்		
12	காஞ்சிபுரம்	காலை 9 மணி	18	மதுரை	காலை 9 மணி
,,	வேலூர்	மாலை 6 ,,	,,	விருதுநகர்	மாலை 6 ,,
13	திருப்பத்தூர்	காலை 9 ,,	19	திருநெல்வேலி	காலை 9 ,,
,,	கிருஷ்ணகிரி	மாலை 6 ,,	,,	நாகர்கோவில்	மாலை 6 ,,
14	சேலம்	காலை 9 ,,	20	ஓய்வு	
,,	ஈரோடு	மாலை 6 ,,	21	காரைக்குடி	மாலை 6 ,,
15	கோயமுத்தூர்	காலை 9 ,,	22	பட்டுக்கோட்டை	காலை 9 ,,
,,	உடுமலைப்பேட்டை	மாலை 6 ,,	,,	மாயவரம்	மாலை 6 ,,
16	கரூர்	காலை 9 ,,	23	கடலூர்	காலை 9 ,,
,,	திருச்சி	மாலை 6 ,,			
17	திண்டுக்கல்	காலை 9 ,,		23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்	
,,	பெரியகுளம்	மாலை 6 ,,			

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு:—தேர்தல் ஆய்வுக்குழு, திட்டமிட்டுள்ளபடி செல்லுமிடங்களில் தொடர்ந்து தன் பணியில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால், எந்த இடத்திலும் எக்காரணங்கொண்டும் பொதுக்கூட்டங்களோ, வேறு பொது நிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்ய வேண்டாமென்று கிளைக் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)